**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No.610/2022

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் நாள் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு.வெள்ளிங்கிரி | வயது:74 |
| த/பெ. : திரு. ராமசாமி | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

1. வாதி ஆஜர். பிரதிவாதிகள் ஆஜர். வாதி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் 3ம் தரப்பினர். வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும். வாதியும், 1ம் பிரதிவாதியும் வீரம்மாளின் வாரிசு. 2 முதல் 4 பிரதிவாதிகள் சுசிலாவின் வாரிசு. சுசிலா வீரம்மாளின் மகள். சுசிலா காலமாகிவிட்டார். இறந்து போன சுசிலா என்னுடைய அத்தை மகள். வாதி, பிரதிவாதி என்னுடைய உறவினர்கள். வாதி, பிரதிவாதிகள் வீரம்மாளின் வாரிசுகள். வீரம்மாளுக்கு பாதியப்பட்ட சொத்துக்களில் வாதி, பிரதிவாதிகளில் சமரசம் ஏற்பட்டு பிரித்துக்கொண்டுள்ளார்கள். வாதி, பிரதிவாதிகளிடையே முன்னின்று தாவா பிரச்சனையை நான் தான் சமாதானம் ஏற்படுத்தினேன். வீரம்மாளின் சொத்தில் இரண்டு வீடு, ஒரு காலியிடம் உள்ளது. அதன் அளவுகள் விஸ்தீரணம் எனக்கு தெரியாது.

2. சாட்சியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது – ஒளி நகல் – சா.சா. ஆ– X1.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.01.31 19:07:26 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.

**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–2

O.S.No.610/2022

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் நாள் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு.மணோகரன் | வயது:71 |
| த/பெ. : திரு. அவிநாசி | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி ஆஜர். பிரதிவாதிகள் ஆஜர். வாதி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி. என்னுடைய தாயார் பெயர் வீரம்மாள். என்னுடைய தாயாருக்கு முத்தன்னம்பாளையம் கிராமம், 0.7 செண்ட் சொத்து உள்ளது. அந்த சொத்தில் இரண்டு வீடு, ஒரு காலியிடம் உள்ளது. சமரச மையத்தில் மூலம் எங்களுக்குள் தீர்வு ஏற்பட்டு சமரச அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் எனக்கு உரிய பாகத்தை பிரித்துக்கொடுக்கவேண்டும்.

வாதி தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.01.31 19:07:32 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.